NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2008

# TAMIL HOME LANGUAGE: PAPER I

Time: 2 hours Marks: 70

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This paper consists of 11 pages.
2. Read the instruction to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers in **TAMIL**.

---

IEB Copyright © 2008

## (A) பகுதி ஒன்று

கீழ்க்காணும் கதையைக் கவனமாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குப் பதில் தரவும்.

# சிறு துளி பெரு வெள்ளம்

கபிலன், வளவன் இருவரும் உடன்பிறந்தவர்கள். கபிலன் மூத்தவன்; பதினோராம் வகுப்பில் படிக்கிறான்; விளையாட்டில் விருப்பமுள்ளவன்.

வளவன் எட்டாம் வகுப்பில் படிக்கும் சிறுவன்; சுறுசுறுப்பாக இருப்பான்; படிப்பில் ஆர்வமுள்ளவன்.

வளவன் படிக்கும் பள்ளியில் சிறுசேமிப்புத் திட்டம் ஒன்று இருந்தது. வளவன் அத்திட்டத்தில் சேர்ந்திருந்தான்.

வளவன் வீட்டுக்குச் செல்லப்பிள்ளை. அப்பா, அவனுக்குத் தின்பண்டம் வாங்க, நாள்தோறும் காசு தருவார். அந்தக் காசைச் செலவழிக்காமல் பள்ளிக்கு எடுத்துச் செல்வான். அங்குச் சேமிப்பு வில்லைகள் 25 காசு, 50 காசு, ஒரு ரூபாய் என இருக்கும். வளவன் தன்னிடம் உள்ள காசுக்குத் தகுந்த வில்லைகளை வாங்கிச் சேமிப்பு அட்டையில் ஒட்டி வருவான். ஐந்து ரூபாய்க்கு வில்லைகள் ஒட்டியவுடன் அதை அஞ்சலகத்தில் உள்ள சேமிப்புக் கணக்கில் வரவு வைத்துவிடுவார்கள்.

ஒரு நாள், பள்ளித் தலைமை ஆசிரியர் வளவனை அழைத்தார். ''வளவா! நீ இதுவரை சிறுசேமிப்பில் எவ்வளவு சேர்த்து வைத்துள்ளாய்?'' என்று கேட்டார்.

வளவன் நூறு ரூபாய் வரை சேமித்து வைத்திருப் பதாகக் கூறினான். தலைமை ஆசிரியர் வளவனைத் தட்டிக் கொடுத்தார். ''நம் பள்ளியில் இந்த ஆண்டு உனது சிறுசேமிப்புப் பணம்தான் அதிகம். அதற்காக உனக்கு நாளைக் காலை வழிபாட்டுக் கூட்டத்தின் போது, பரிசு தரப்போகின்றேன். உன் பெற்றோரை அழைத்து வா'' என்றார்.



வளவனுக்கு அளவில்லா மகிழ்ச்சி. பள்ளி முடிந்ததும் வீட்டுக்குச் சென்றான். வீட்டில் அவன் தந்தை கவலையுடன் இருந்தார்.

''ஏன் அப்பா ஒரு மாதிரியாய் இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் வளவன். அதற்கு அவன் தந்தை ''உன் அண்ணன் கபிலனுக்குத் தொழில்நுட்பப் பள்ளியில் படிக்க இடம் கிடைத்துள்ளது. அதற்குப் பணம் தேவை. கையில் பணம் இல்லை. என்ன செய்வது என்று நினைத்துக் கொண்டிருந்தேன்'' என்றார்

வளவன், ''எவ்வளவு ரூபாய் அபபா தேவைப்படும்?'' என்று கேட்டான். தந்தை நிமிர்ந்து பார்த்து ''உனக்கேன் அதெல்லாம்? நீ போ'' என்றார்.

''அப்பா, நீங்கள் எனக்குத் தின்பண்டம் வாங்கு வதற்குக் காசு தருவீர்களே! அந்தக் காசுகளையெல்லாம் பள்ளியில் உள்ள சிறுசேமிப்பில் சேமித்து வைத்தேன். என்

சேமிப்பில் இப்பொழுது நூறு ரூபாய் உள்ளது. அதனை எடுத்துக் கொள்ளலாம் அப்பா, அதற்காகக் கேட்டேன். எங்கள் தலைமையாசிரியரும் உங்களை நாளை அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்'' என்றான்.

''இருநூறு ரூபாய் தேவைக்கு ஒரு நூறாவது கிடைக்கிறதே! மகிழ்ச்சி'' என்று அவனைத் தட்டிக் கொடுத்தார் அப்பா.

மறுநாள் காலை வளவன் பள்ளிக்குச் செல்லும் போது அவன் அப்பாவையும் அழைத்துச் சென்றான்.

பள்ளியில் காலை வழிபாடு தொடங்கியது. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடிய பிறகு, தலைமை ஆசிரியர் வளவனைப் பாராட்டி, ஓர் எழுதுகோலும் குறிப்பேடும் வழங்கினார். வளவன் தன் சேமிப்பில் உள்ள பணத்தைத் தருமாறு வேண்டினான். அவன் தந்தையிடம் நூறு ரூபாய் தரப்பெற்றது.

சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் வளவனைப் போல் சிறுசேமிப்புத் திட்டத்தால் பயன் பெறலாம்.

சிறுசிறு மழைத்துளிகள் ஒன்றுசேர்ந்து பெரிய வெள்ளம் உருவாகிறது. சிறுசிறு மலர்களைச் சேர்த்தால் பூமாலையாகிறது. தேனீக்கள் சிறுசிறு தேன் துளிகளைத் திரட்டிப் பெரிய தேனடையை உருவாக்குகின்றன. சிறுவர், சிறுமியர் சிறுகச் சிறுகச் சேமித்து வந்தால் பெருந்தொகை ஆகும்; தேவைப்படும் பொழுது உதவும்.

''சேமிக்கப் பழகு; நாளும் சேமிக்கப் பழகு;
சிற்றெறும்பு தேனீ போலச் சேமிக்கப் பழகு.''

IEB Copyright © 2008

1.1. கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுதுக.
**Fill in the blank spaces with words taken from the passage.**

1.1.1. வளவன் படிக்கும் பள்ளியில் _________ ஒன்று இருந்தது.
1.1.2. தலைமையாசிரியர் வளவனிடம், 'நாளை நீ உன் _________ அழைத்து வா' என்றார்.
1.1.3. வீட்டில் அவன் தந்தை _________ இருந்தார்.
1.1.4. தேனீக்கள் சிறுசிறு _________ துளிகளைத் திரட்டிப் பெரிய தேனடையை உருவாக்குகின்றன.
1.1.5. சிறுசிறு மலர்களைச் சேர்த்தால் _________ ஆகிறது.

(5x1=5)

1.2. சரியான விடை எழுதுக.
**Answer the following questions.**

1.2.1. வளவன் எந்த வகுப்பில் படிக்கிறான்?

1.2.2. வளவன் வீட்டுக்கு எப்படிப்பட்ட பிள்ளை?

1.2.3. வளவன் படிக்கும் பள்ளியில் என்ன இருந்தது?

1.2.4. வளவனை ஏன் தலைமை ஆசிரியர் தட்டிக் கொடுத்தார்?

1.2.5. மறுநாள் காலை வளவன் யாரைப் பள்ளிக்கு அழைத்துச் சென்றான்?

(5x2=10)

1.3. உண்மை அல்லது உண்மை அல்ல என்று கூறுக.
**State whether the following are True or False.**

1.3.1. கபிலன் விளையாட்டில் விருப்பமுள்ளவன்.

1.3.2. வளவன் வீட்டுக்கு மூத்தவன்.

1.3.3. வளவன் இருநூறு ரூபாய் வரை சேமித்து வைத்திருப்பதாகக் கூறினான்.

1.3.4. சிறுசிறு மழைத்துளிகள் ஒன்றுசேர்ந்து பெரிய வெள்ளம் உருவாகிறது.

1.3.5. அப்பா கொடுத்த காசைக் கொண்டு வளவன் பள்ளியில் தின்பண்டம் வாங்கினான.

(5x1=5)

1.4. கீழ்வரும் சொற்களை வரிசைபடுத்தி முறையான வாக்கியங்கள் எழுதுக.

1.4.1. எட்டாம் வளவன் வகுப்பில் சிறுவன் படிக்கும். (2)

1.4.2. சேர்ந்திருந்தான் வளவன் அத்திட்டத்தில். (2)

1.4.3. வீட்டுக்குச் சென்றான் முடிந்ததும் பள்ளி. (2)

(6)

1.5. கீழ்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.

1.5.1. தத்மூவன் (1)

1.5.2. வப்குல்பி (1)

1.5.3. ஆரிசிர்ய (1)

1.5.4. கிழ்சிச்ம (1)

(4)

(30)

IEB Copyright © 2008

# (B) பகுதி இரண்டு

**2.1. கீழ்வரும் பத்திகளைச் சுமார் 15-20 வரிகளில் சுருக்கி எழுதுக. (10)**

தீபனும் அவன் நண்பர்களும் திரைப்படம் பார்த்துவிட்டுத் தங்கள் வீட்டின் அருகில் இருந்த பூங்காவின் வழியாக நடந்து வந்துகொண்டிருந்தனர். மூவரும் தாங்கள் கண்ட திரைப்படத்தைப்பற்றி வேடிக்கையாகப் பேசிக்கொண்டே நடந்ததால் அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. இருள் பரவத் தொடங்கியது. மூவரும் அப்போதுதான் நேரம் ஆகிவிட்டது என்பதை உணர்ந்தனர். உடனே அவர்களின் நடை துரிதமாகியது.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு மின்னொளி வந்தது. அதன் கதிர்கள் அவர்களின் கண்களைச் கூசச்செய்தன. அவர்கள் பயத்தில் அருகில் இருந்த புதருக்குப் பின்னால் மறைந்துகொண்டனர். அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. வானத்தில் இருந்து ஒரு பெரிய வான்கலம் பூங்காவில் தரை இறங்கியது. அது பேரொலியை எழுப்பிக்கொண்டு வந்திறங்கியது. அந்த வான்கலத்தில் பலவிதமான விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்தன. மூன்று நண்பர்களும் கண்ட காட்சியை அவர்களால் நம்பமுடியவில்லை. அவர்கள் வான்கலங்களைப்பற்றிப் புத்தகங்களில் படித்ததுண்டு; படங்களில் பார்த்ததுண்டு. ஆனால், நேருக்கு நேராகப் பார்ப்பது இதுதான் முதல் தடவை.

திடீரென்று வான்கலத்தின் கதவு திறந்தது. உள்ளிருந்து முட்டை வடிவம் கொண்ட வேற்றுலக மனிதர்கள் வெளியே வந்தனர். அவர்கள் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன. அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஒருவருக்கும் புரியாத ஒரு மொழியில் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

# (C) பகுதி மூன்று

3. கீழ்வரும் பகுதிகளைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குப் பதில் தருக.

அன்பன் பள்ளி முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தான். அப்போது ஒரு மரத்திலிருந்து இனிய கானம் கேட்டது. ஆவல் மேலிட அவன் மேலே நோக்கினான். அங்கே ஓர் அழகிய மஞ்சள் நிறப் பறவையைப் பார்த்தான். அவன் அது போன்ற பறவையை இதற்கு முன் பார்த்ததேயில்லை.

மறுநாள் அன்பன் பள்ளிக்குச் சென்றான். அவ்வேளை அவனது அறிவியல் ஆசிரியர் திரு. செல்வம் வகுப்பில் நுழைந்தார். அவர், ''மாணவர்களே! உங்களுக்குத் தெரிந்த சில வகைப் பறவைகளைப்பற்றிச் சொல்லுங்கள்,'' என்றார். உடனே அன்பன் தான் பார்த்த அந்த மஞ்சள் நிறப் பறவையைப்பற்றிக் கூறினான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த திரு. செல்வம்,'' இது ஒரு வகை அரிய பறவையினமாகும். இவற்றைப் போனற பலவகைப் பறவைகளைப் பாதுகாக்க நம் அரசினர் இயற்கைச் சூழல் நிறைந்த பல இடங்களை ஒதுக்கி வைத்துள்ளனர். 'நாளை நாம் அந்த இடங்களுள் ஒன்றான 'சுங்காய் பூலோ' பறவைகள் சரணாலயத்திற்குச் செல்லவிருக்கிறோம்,' என்றார்.

**3.1. கீழ்வரும் சொற்களைச் சரியாக எழுதுக.**

**உதாரணம்: பளிள் = பள்ளி**

3.1.1. டிமுந்து (1)

3.1.2. றபவையை (1)

3.1.3 ரிதெதந் (1)

(3)

IEB Copyright © 2008

3.2. கீழ்வரும் சொற்களை வரிசைப்படுத்தி முறையான வாக்கியங்கள் எழுதுக.

உதாரணம்: எங்கே போகிறாய் நீ? = நீ எங்கே போகிறாய்?

3.2.1. ஒரு மரத்திலிருந்து இனிய கேட்டது கானம் அப்போது. (2)

3.2.2. அது அவன் பறவையைப் இதற்கு முன் போன்ற பார்த்ததேயில்லை. (2)

3.2.3. அன்பன் பள்ளிக்குச் சென்றான் மறுநாள். (2)

3.2.4. பறவையினமாகும் அரிய இது ஒரு வகை. (2)

(8)

3.3. சரியான விடை தருக.

3.3.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

3.3.2. மேற்காணும் பகுதியிலிருந்து மூன்று பெயர்ச்சொற்கள் எழுதுக. (3)

3.4. கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் தருக.

உதாரணம்: அது = இது

3.4.1. கீழே (1)

3.4.2. பின் (1)

3.4.3. அந்த (1)

(18)



3.4. முன்வரும் படத்தின் அடிப்படையில் வரும் கேள்விகளுக்குப் பதில் தருக.

3.4.1. ஒருமைக்குப் பன்மை தருக

உதாரணம்: பெண் = பெண்கள்

3.4.1.1. செடி (1)

3.4.1.2. குளம் (1)

(2)

IEB Copyright © 2008

**3.4.2. சேர்த்து எழுதுக**

**உதாரணம்: இதை + சொல் = இதைச்சொல்**

3.4.2.1. அவனை + பார் (1)

3.4.2.2. பூ + செடி (1)

(2)

**3.4.3. பிரித்து எழுதுக**

**உதாரணம்: அந்தப்பெட்டி = அந்த + பெட்டி**

3.4.3.1. இந்தப்பெண் (1)

3.4.3.2. புதியச்செடி (1)

(2)

**3.4.4. ஆண்பாலுக்குப் பெண்பால் தருக.**

**உதாரணம்: அப்பா = அம்மா**

3.4.4.1. மகன் (1)

3.4.4.2. சிறுவன் (1)

3.4.4.3. ஆண்கள் (1)

(3)

**3.4.5. கீழ்வரும் எழுத்துகளையும் சொற்களையும் வரிசையாக எழுதுக.**

**உதாரணம்: ஆ ஊ அ ஏ ஈ = அ ஆ ஈ ஊ ஏ**

3.4.5.1. ஐ ஒ ஆ அ ஈ (1)

3.4.5.2. குளம் அவன் அம்மா தண்ணீர் இவள் (2)

(3)

(12)

**[30]**

**Total: 70 marks**

IEB Copyright © 2008